# நோயாளி தகவல் கையேடு

## [PREMIXED/ BIPHASIC INSULIN]

**Novomix©/ Mixtard ©**

### இந்த மருந்து எதற்கானது?

Novomix/Mixtard என்பது ஏற்கனவே கலக்கப்பட்ட இன்சுலின். இடைநிலையில் செயல்படும் இன்சுலினும் குறுகிய நேரம் செயல்படும் இன்சுலினும் இதில் கலந்துள்ளது. நீரிழிவு நோயாளிகளின் உயர் இரத்தச் சர்க்கரை அளவைக் குறைப்பதற்கு இது பயன்படுத்தப்படுகிறது. குறுகிய நேரம் செயல்படும் இன்சுலின், சாப்பாட்டுக்குப் பிறகு இரத்தச் சர்க்கரை அளவைக் குறைக்க உதவுகிறது. இடைநிலையில் செயல்படும் இன்சுலின், நாள் முழுவதும் உங்களது இரத்தச் சர்க்கரை அளவைக் கட்டுப்படுத்த உதவுகிறது.

### இந்த மருந்தை நான் எப்படி உட்கொள்ளவேண்டும் / பயன்படுத்தவேண்டும்?

Novomix/Mixtard இன்சுலினை உங்கள் மருத்துவர் வழிகாட்டியபடி பயன்படுத்துங்கள்.

இந்த மருந்து தோலுக்கும் தசைக்கும் இடையிலுள்ள கொழுப்புத் திசுவில் ஊசிவழி ஏற்றப்படவேண்டும்.

- சாப்பாட்டுக்குப் பதினைந்து நிமிடத்திற்கு முன்னதாக Novomix ஏற்றவேண்டும்
- சாப்பாட்டுக்கு முப்பது நிமிடத்திற்கு முன்னதாக Mixtard ஏற்றவேண்டும்

உங்கள் மருந்து பால் போல் அல்லது மேகமூட்டம் போல் இருக்கவேண்டும். இன்சுலினைப் பயன்படுத்துவதற்குமுன், அதை மீண்டும் கலக்குவதற்காக பேனாவை அல்லது பேனா நிரப்பலை உள்ளங்கைகளில் உருட்டுங்கள். புட்டியின் அடிப்பகுதியில் ஏதேனும் வெள்ளை நிறப் பொருள் தென்பட்டால், அதனை நீங்கள் பயன்படுத்தக்கூடாது.

Novomix பேனாவுக்கும் Mixtard பேனா நிரப்பலுக்கும், எப்போதும் குறைந்தது 12 யூனிட் இன்சுலின் மீதம் இருப்பதை உறுதி செய்யுங்கள். மறுகலக்கலுக்கு இது அவசியம். 12 யூனிட்டுக்கும் குறைவாக இருந்தால், தயவுசெய்து புதிய இன்சுலின் பேனாவை அல்லது பேனா நிரப்பலைப் பயன்படுத்துங்கள்.

<u>ஊசி குத்தும் இடத்தைத் தேர்ந்தெடுப்பது எப்படி</u>

தோலுக்கும் தசைக்கும் இடையிலுள்ள கொழுப்புத் திசுவில் இன்சுலின் ஊசியைக் குத்தவேண்டும். உங்கள் உடலில் லைபோடிஸ்ட்ரோஃபி எனும் கொழுப்பு மறைவு சீர்குலைவு (அதே இடத்தில் மீண்டும் மீண்டும் ஊசி குத்தும்போது சருமத்தில் ஏற்படும் சிறிய புடைப்பு அல்லது பள்ளம்) ஏற்படுவதைத் தடுக்க, ஒரு குறிப்பிட்ட பகுதியில் வெவ்வேறு இடங்களில் மாறிமாறி ஊசி குத்தவேண்டும்.

உடற்பயிற்சியின்போது தீவிரமாகப் பயன்படுத்தப்படும் பகுதிகளில் இன்சுலின் ஊசி குத்தவேண்டாம்.

உங்களது வயிற்றுப் பகுதியே ஊசி குத்துவதற்கு ஆகச்சிறந்த இடம். ஏனென்றால், வயிற்றுப் பகுதியில்தான் இன்சுலின் ஆக வேகமாகவும் சீராகவும் உறிஞ்சப்படும்.

